**Catholic Bishop's House**

1331-W, John Paul Nagar
K.T.C. Nagar,
Maharaja Nagar (Post)
Tirunelveli - 627 011
Tamil Nadu
INDIA
(Courier Address)

Post Box No. 108
Palayamkottai - 627 002
Tamil Nadu
INDIA
(Postal Address)

**Rt Rev. S. Antonysamy D.D., D.C.L.,**
**Bishop of Palayamkottai**

01.09.2020

அன்பார்ந்த அருட்தந்தையர்களே, அருட்சகோதர, சகோதரிகளே, அன்பு இறைமக்களே,

இயேசுவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள்,

கோவிட் - 19 என்ற மாபெரும் தொற்று பரவலால் மக்கள் சமூகம் நலவாழ்வை இழந்து வருகின்றது. அதைத் தடுக்கும் பொருட்டு அரசு எடுத்த நெறிமுறைகளின் அடிப்படையில் நமது ஆலயங்களும் பூட்டப்பட்ட நிலையில், தனித்து வழிபட்டு வந்தோம். செப்டம்பர் முதல் தேதியிலிருந்து ஆலயங்கள் திறக்கப்பட்டு வழிபாடு நடத்த அரசு அனுமதித்துள்ள நிலையில், கீழ்காணும் நடைமுறைகளை அரசு குறிப்புகளின் அடிப்படையில் நானும் உங்களின் மேலான கவனத்திற்கும், செயல்பாட்டிற்கும் அளிக்க விளைகிறேன்.

1. பங்குத் தந்தையர் பங்குப் பேரவையிடமோ அல்லது அன்பிய வழிகாட்டிகளிடமோ அரசு வழிகாட்டுதலைப் பின்பற்றுவது சம்மந்தமாக கலந்து உரையாடலாம்.

2. பங்குத்தந்தை மேலே குறிப்பிட்ட கலந்துரையாடல் வழியாக ஒவ்வொரு திருப்பலியிலும் எத்தனை பேர் கலந்து கொள்ளலாம் என்றும், தேவைப்படின் ஞாயிற்றுக்கிழமைகளில் எத்தனை திருப்பலி, எந்நேரத்தில் நிறைவேற்றலாம் என்றும் முடிவு செய்யலாம். (அரசு வழிகாட்டுதலின்படி 100 சதுரமீட்டருக்குள் 20 நபர்கள் தான் இருக்க வேண்டும்.)

3. இறைமக்கள் ஆலயத்திற்கு வரும்பொழுது கண்டிப்பாக முகக்கவசம் அணிந்துவர வேண்டுமென்று வற்புறுத்த வேண்டும். ஒரு சிலர் முகக்கவசமின்றி வந்தால் ஆலயத்தின் சார்பாக அவர்களுக்கு முகக்கவசம் வழங்கப்பட வேண்டும்.

4. உடல்நலமற்ற இறைமக்கள் ஆலயத்திற்கு வரவேண்டாம் என்று அறிவுறுத்தல் வேண்டும்.

5. ஏற்கனவே இதற்குமுன் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல் முறைப்படி (காண்: ஜூலை8, 2020) ஆலயத்திற்கு வெளியே தேவையான சுகாதார வசதிகள் செய்திருக்க வேண்டும்.

6. ஒவ்வொரு திருப்பலிக்குப் பின்பும் ஆலயமும் அதன் சுற்றுப்புறமும் கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யப்பட வேண்டும்.

7. இறைமக்கள் ஆலயத்திற்குள் நுழைவதற்கு ஒரு வழியும், வெளியே செல்வதற்கு இன்னொரு வழியும் என்று ஒதுக்கப்பட வேண்டும்.

8. ஆலயங்களில் செலுத்தப்படும் காணிக்கைகளை காணிக்கைப் பெட்டிகளில் மட்டும் போட வலியுறுத்த வேண்டும். மக்களிடையே சென்று காணிக்கை வசூலிப்பதும், காணிக்கைப் பவனியும் தவிர்க்கப்பட வேண்டும்.

9. நற்கருணை வழங்குவது என்பது திருப்பலியிலிருந்து பிரிக்க முடியாத ஒன்று. இது சம்மந்தமான அரசு வழிகாட்டுதலில் அனுமதி வழங்க அரசோடு பேசப்பட்டு வருகிறது. நற்கருணை வழங்குவது சம்பந்தமாக பங்குத் தந்தையர்கள் விவேகமுடன் முடிவெடுத்து செயல்பட வேண்டுகிறோம்.



**Palayamkottai** : Tel : **+91 462 2522042**, Mobile : **9443370160**
E-mail : bishop@palayamkottaidiocese.org; Website : www.palayamkottaidiocese.org

10. இறைமக்கள் திருப்பலியில் பங்கேற்பதன் வழியாக நிறை ஆசீர் பெறுகிறார்கள். எனவே திருப்பலிக்குப் பின் அவர்கள் குருக்களிடம் ஆசி பெற வேண்டியதில்லை என்பதைத் தெரியப்படுத்த வேண்டும்.

11. ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்பட வேண்டும். எப்பொழுதும் ஒருவருக்கொருவர் 6 அடி இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

12. இறைமக்கள் ஆலய வளாகத்தில் கூடி நிற்பது கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும்.

13. வழிபாட்டு நிகழ்ச்சிகள் முடிந்தவுடன் இறைமக்கள் ஆலயத்தை விட்டு வெளியேற வலியுறுத்தப்பட வேண்டும்.

14. இரவு 8 மணிக்குள் ஆலயமும், வளாகமும் அடைக்கப்பட வேண்டும். ஆலய வளாகத்தில் யாரும் தங்குவதற்கு அனுமதி இல்லை.

15. தற்போதைய சூழ்நிலையில் அசனம் மற்றும் பொது உணவுப் பகிர்வுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

16. அரசிடமிருந்து மறுவழிகாட்டுதல் வரும்வரை ஆலயத் திருவிழாக்கள் தவிர்க்கப்பட வேண்டும். ஆலயத்திலோ, ஆலய வளாகத்திலோ, வேறு எந்தவிதமான நிகழ்ச்சிகளும் நடைபெறக்கூடாது.

17. ஒரே நேரத்தில் ஆலயத்தில் ஒரு திருமண நிகழ்ச்சி தான் நடைபெற வேண்டும். திருமண நிகழ்ச்சியில் அரசு வழிகாட்டுதலின்படி அதிகமாக 50 பேர் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

18. அடக்க நிகழ்ச்சிகளிலும் 50 பேர் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

19. முடியுமானால் ஆலயத்திற்கு வருகின்ற இறைமக்களை தன்னார்வப் பணியாளர்கள் வழியாக வழிநடத்தலாம்.

ஆலயங்கள் திறக்கப்பட்டு வழிபாடு நடத்த அரசு அனுமதி வழங்கியிருக்கிறபடியினால் தொற்று பரவல் முழுவதுமாக நின்றுவிட்டது என்று அர்த்தமல்ல. எனவே நமது நலவாழ்விற்கும், அடுத்தவரின் நலவாழ்விற்கும் உறுதுணையாக இருக்கும்பொருட்டு மேலே காணும் நடைமுறைகளைக் கடைப்பிடித்து அனைவரும் நலவாழ்வு பெற்றிட ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருப்போம்.

நலவாழ்வின் நாயகன் அனைவருக்கும் நலவாழ்வு வழங்கிட செபிக்கிறேன்.

ஆசீர்!

நம் ஆண்டவரில் அர்ப்பணத்துடன்,

+ S. Antonysamy

+ ச. அந்தோனிசாமி
பாளையங்கோட்டை மறைமாவட்ட ஆயர்

Rt Rev. S. Antonysamy, D.D., D.C.L. Bishop of Palayamkottai